# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 68 / 2016**

திரு. R. செந்தில்குமார்,
107/1, முத்து நகர்,
புதுக்கோட்டை ரோடு,
தஞ்சாவூர்–613 005.

மேல் முறையீட்டாளர்
(திரு. R. செந்தில்குமார்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர்–613 007.

எதிர்மனுதாரர்
(திரு. K. ராஜா, உதவி பொறியாளர்/மேற்கு/தஞ்சாவூர்–18.11.16
மற்றும் திரு. R.S. சுதாகர், உதவிசெயற்பொறியாளர்/புறநகர்/மேற்கு/
தஞ்சாவூர்–21.12.16)

**கேட்புரை நாள்: 18.11.2016 & 21.12.2016**

**ஆணை நாள் : 13–1–2017**

திரு. R. செந்தில்குமார், முத்து நகர், தஞ்சாவூர் அவர்களின் 27–8–2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண் 68/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின்மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 18–11–2016 மற்றும் 21.12.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

(i) மின்இணைப்பு எண்.405–009–671ற்கான நிலுவைத்தொகை ரூ.2,49,591/– செலுத்தக்கோரும் தணிக்கை சீட்டு எண்.156ஐ ரத்து செய்யவேண்டும்.

(ii) அவருடைய தற்காலிக மின்இணைப்பை முடித்த தினத்திலிருந்து 3 மாதங்களுக்குள் மீதித்தொகை திரும்ப வழங்கப்படவில்லை என்பதால் வாரம் ஒன்றிற்கு ரூ.100/– வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்.

**2. வழக்கின் சுருக்கம் :**

2.1 மின்இணைப்பு எண்.405–009–671 மேல்முறையீட்டாளரின் பெயரில் 16.10.2009ல் tariff Vல் வழங்கப்பட்டுள்ளது.

2.2 மேற்கண்ட மின்இணைப்பை கட்டிடம் கட்டுவதற்கு 26.10.09 முதல் 13.5.2013 வரை பயன்படுத்தியதாக ரூ.2,49,591/– நிலுவைத்தொகையாக மின்வாரியத்தின் தணிக்கை பிரிவு அறிக்கையின்படி செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டுவதற்கு தற்காலிக மின்இணைப்பு பெற்றுள்ளதாக தெரிவித்து அந்த தணிக்கை தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனு செய்துள்ளார்.

2.4 தணிக்கை தொகை தள்ளுபடி செய்யப்படவில்லை என்பதால் தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 20.6.2016 நாளிட்ட மனுவை சமர்ப்பித்துள்ளார். ஆனால், மனு செய்து இரண்டு மாதங்கள் கடந்த பின்பும் மன்றத்திடமிருந்து தகவல் எதுவும் இல்லை என்பதால் 27.8.2016 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

2.5 நுகர்வோர்குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி 17(4)(a)ன் படி மன்றத்திற்கு மனு செய்து 50 நாட்கள் வரை பதில் எதுவும் பெறப்படவில்லை என்பதால் மேற்கண்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.68/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்**

3.1 26.10.2009 அன்று மின்இணைப்பு எண்.405–009–671 வழங்கப்பட்டு அதனை பயன்படுத்திடாமலே மினிமம் தொகை மட்டும் கட்டி வந்தார். மின் உபயோகம் இல்லை என்பதை கணினியில் பார்த்தாலே தெரியும்.

3.2 பிறகு அந்த இடத்தில் புதிதாக வெறும் 500 சதுர அடியில் கட்டிடம் கட்டிட வேண்டி ஒரு தற்காலிக மின்இணைப்பை 23.4.2010 முதல் பெற்றார். அதனை பயன்படுத்திதான் கட்டிட வேலைகளையும் முடித்தார். தற்காலிக மின்இணைப்பு பெற்ற நாளான 23.4.2010 முதல் 25.10.2010 வரையிலான காலத்தில் மின்இணைப்பு எண்.405–009–617ன் மின் அளவிகூட மின்வாரிய அலவலகத்தில்தான் பாதுகாப்பாக இருந்தது.

3.3 கட்டிட வேலைகள் முடிந்த பிறகுதான் தற்காலிக மின்இணைப்பை அகற்றி விட்டு புதிய கட்டிடத்தில் பழைய மின்இணைப்பு எண்.405–009–671ன் மின் அளவியை நிறுவிட பணத்தை செலுத்தியபிறகுதான் அவர் இடத்தில் மி.இ.எண்.405–009–671ன் மின்அளவி பொருத்தப்பட்டு மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

3.4 26.10.2010 அன்றுதான் தனியாக மற்றொரு மின்இணைப்புவேண்டி பணம் செலுத்தப்பட்டு 8.11.2010 அன்று மி.இ.எண்.405–009–702 வழங்கப்பட்டது. இதில் எந்த தவறும் முறை கேடும் வாரிய விதிமீறல்களும் நடைபெறவில்லை. ஆனால், மேற்கண்ட விவரங்களை உதவி மின்பொறியாளர் கணினியில் முறைப்படி பதிவு செய்யாமல் இருந்துள்ள காரணத்தால் தணிக்கை குழுவினர் அவரது மின்இணைப்பை கணினி வழி ஆய்வு செய்து ரூ.2,49,591/–க்கு தணிக்கை சீட்டு வழங்கியுள்ளனர்.

3.5 மேற்கண்ட இடத்தில் தற்காலிக மின்இணைப்பு பெற்றதற்கான தொகை செலுத்திய ரூ.50+10340+5035க்கான மூன்று இரசீதுகள் மற்றும் வெள்ளை வண்ண அட்டையின் நகல்களை மின்குறைதீர்ப்பாளரின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைத்துள்ளார். மூன்று முறை எழுதிக் கொடுத்தும் இதுவரை தற்காலிக மின்இணைப்புக்கான கட்டணம் போக மீதி டெபாசிட் தொகைகூட திருப்பி அளிக்கப்படாமலே உள்ளது.

3.6 ஒரு கட்டிடம் கட்ட ஒரு தற்காலிக மின்இணைப்புதானே வாங்க வேண்டும் அவ்வாறு வாங்கி அதனை முடித்துக்கொண்டு பிறகு பழைய மின்இணைப்புக்கான மின்அளவியையும் புதிதாக ஒரு மின்இணைப்பையும் வாங்கியுள்ளார். இதில் மின்வாரிய விதி மீறல்கள் ஒன்றும் இல்லை என்பதையும் கணினியில் பதிவு செய்யாதது திரு. ராஜா, உதவி பொறியாளரின் தவறு என்று தணிக்கைக்கு தெளிவாக்கி இருந்தால் அவரது மின்இணைப்புக்கான தணிக்கை சீட்டு ரத்து செய்யப்பட்டிருக்கும் என்பதை அறியாமல் அவரது மனு தணிக்கையில் ஏற்புடையதாக இல்லை என்பதால் ரூ.2,49,591/– செலுத்த கோருவது வியப்பாகவும் வேதனையாகவும் முறையற்றதாகவும் உள்ளது.

3.7 மெயின் ரோட்டில் கட்டுமான பணி நடைப்பெற்றதால் மாதத்தில் இரண்டு அல்லது மூன்று முறையாவது மின்வாரிய அலுவலகப் பணியாளர்களும் முன்னாள் இராணுவத்தினர்

குழுவினரும் அவரது இடத்தைப் பார்வையிட்டுதான் சென்றிருக்கிறார்கள் என்பதையும் மின்குறைதீர்ப்பாளருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

3.8 மேற்கண்டவாறு அவர் எந்த தொகையும் செலுத்த தேவையில்லை மாறாக வாரியம்தான் அவருக்கு மீதி டெபாசிட் தொகையை 5 வருடமாக தராமல் உள்ளது என்பதால் தணிக்கை சீட்டு எண்.156–யையும் தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தற்காலிக மின்இணைப்பு முடித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் மீதி தொகை அவருக்கு திருப்பியளிக்கப்படவில்லை என்பதால் வாரம் ஒன்றிக்கு ரூ.100/– வீதம் இழப்பீடும் வழங்க உத்திரவிடக்கோரியும் இந்த மனுவை மன்றத்தில் சமர்ப்பிக்கிறார்.

**4 <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>**

4.1 வாரிய தணிக்கை /திருச்சிராப்பள்ளி குழு 4ன் படி கடந்த 25.6.2013 அன்று மின் இணைப்பு எண்.405–009–671க்கு 26.10.2009 முதல் 13.5.2013 முடிய உள்ள காலத்திற்கு தற்காலிக மின்இணைப்பு பயன்படுத்தியமைக்காக இதன் அடிப்படையில் குறைவுத்தொகையாக ரூ.2,49,591/– நிர்ணயம் செய்திருந்ததை சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகம் மூலமாக கடந்த 15.7.2013 அன்று மின்நுகர்வோருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

4.2 இது சம்பந்தப்பட்ட மின்நுகர்வோரான திரு. R. செந்தில்குமார், அவர்கள் மறுப்பு தெரிவித்திருந்ததின் பேரில் சம்பந்தப்பட்ட உதவி மின்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்பொறியாளர்/இ.கா/தஞ்சாவூர் அவர்களால் துணை தலைமை அகநிலை தணிக்கை அலுவலர்/திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு ரூ.2,49,591/–ஐ முழுவதுமாக ரத்து செய்யக்கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் தணிக்கை துறையிடமிருந்து தற்காலிக மின் இணைப்பு ஆவணங்கள் அல்லது கணினி நுகர்வோர் பதிவேடு மற்றும் முன்பணம் செலுத்திய விவரங்களை அனுப்பி வைக்க கோரி 26.11.2013 அன்று செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதை உடன் பிரிவு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.3 மீண்டும் இது சம்பந்தமாக மின்நுகர்வோர்க்கு குறைவுத்தொகையை செலுத்தக்கோரி தகவல் தெரிவிக்கப்பட்டதில் மின்நுகர்வோர் மறுபடியும் மறுப்பு தெரிவித்ததின் பேரில் சம்பந்தப்படட உதவி செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அதாவது மின்இணைப்பு எண்.405–009–671க்கு உரிய மீட்டரை கழட்டி பிரிவு அலுவலகத்தில் வைத்து கொண்டார்கள். தற்காலிக மின் இணைப்பிற்காக இக்காலகட்டத்தில் இப்பிரிவில் எந்த தற்காலிக மின் இணைப்பையும் அன்றைய நாளில் பணிபுரிந்த அலுவலர்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்படாமல் தனியே பதிவேடு மூலமாகவே தற்காலிக மின்இணைப்பு மின் நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது அதனடிப்படையில் (மி.இ.எண்.405–009–58) தனியே ஒரு மின்இணைப்பு பெற்று அதை 23.4.2010 முதல் 25.10.2010 வரை மட்டுமே கட்டிட பணிக்காக பயன்படுத்தி உள்ளார். (இக்காலகட்டத்தில்தான் 405–009–671க்குரிய மீட்டரை உரிய பிரிவு அலுவலகத்தில் மின்நுகர்வோர் ஒப்படைத்துள்ளார்).

4.4 தற்காலிக மின் இணைப்பை முடித்து விட்டு மீண்டும் மின் நுகர்வோர்க்கு 8.11.2010 அன்று தனியாக மற்றொரு மின் இணைப்பு 405–009–702 வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு மீண்டும் தணிக்கைக்கு மேற்படி தொகையினை இரத்து செய்ய செயற்பொறியாளர் மூலமாக 22.12.2015ல் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால், தணிக்கையில் எதையுமே ஏற்றுக்கொள்ளாமல் 8.1.2016 நாளிட்ட அறிவிப்பில் மின் இணைப்பு எண்.405–009–671க்கு குறைவுத்தொகையான ரூ.2,49,591/– முழுவதுமாக வசூல் செய்ய உத்திரவிட்டுள்ளார்கள். இதனடிப்படையில் உரிய மின்நுகர்வோருக்கு கடிதம் கொடுக்கப்பட்டதில் மேற்படி மின்நுகர்வோர் 20.6.2016 அன்று மின் குறைதீர்ப்பாளர்/ மேற்பார்வை பொறியாளரிடம் மனு அளித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில் சட்டசபை தேர்தல் நடத்தை விதிமுறை அமுலில் இருந்ததால் உடனடியாக மேற்படி மின்நுகர்வோரை மின்குறைதீர்வு மன்றத்திற்கு ஆஜராக கடிதம் அனுப்பவில்லை.

**5. மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை :**

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 18.11.2016 மற்றும் 21.12.2016 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல் முறையீட்டாளரின் சார்பில் திரு.R. செந்தில்குமார் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. K. ராஜா, உதவி பொறியாளர்/மேற்கு தஞ்சாவூர் அன்று 18.11.2016ல் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். திரு. R.S. சுதாகர், உதவி செயற்பொறியாளர்/புறநகர்/மேற்கு/தஞ்சாவூர் அவர்கள் 21.12.2016 அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6. மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்**

6.1 திரு. ஆர். செந்தில்குமார் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 மேல்முறையீட்டாளர், தன்னுடைய கட்டிட வேலைகளுக்கு தனியாக ஒரு மின்இணைப்பு பெற்று கட்டிட வேலைகள் முடிந்த பின்பு அந்த மின்இணைப்பை ரத்து செய்து விட்டதாகவும் கட்டிட வேலை நடந்த காலங்களில் மின்இணைப்பு எண்.405–009–691ன் மின் அளவி கழற்றப்பட்டு உதவி பொறியாளர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது என்றும் எனவே, அந்த மின்இணைப்பை பயன்படுத்தி கட்டிடம் கட்டப்பட்டது என்பது தவறானது என்று வாதிட்டார்.

6.3 மேலும், தன்னுடைய கட்டிட அனுமதி ஹோட்டல் மற்றும் அறைகள் கட்டுவதற்கு என்றுதான் பெறப்பட்டுள்ளது என்பதால் வீடு கட்டுவதற்கு என்று வீதப்பட்டியல் Vல் மின்இணைப்பு எண்.405–009–671 பெறப்பட்டு தணிக்கை துறையின் அனுமானம் தவறு என்றும் வாதிட்டார்.

6.4 மேலும், கட்டிட வேலை முடிந்த பின்பு தான் மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671ன் மின்அளவி மீண்டும் பொருத்தப்பட்டது. மேலும், ஒரு புதிய மின்இணைப்பு எண்.405–009–702ம் வழங்கப்பட்டது என்றும் வாதிட்டுள்ளார்.

6.5 கட்டிடம் கட்டுவதற்கு வாங்கப்பட்ட தற்காலிக மின்இணைப்பு பெறுவதற்கு அவர் ரூ.50/– 30.3.2010லும், ரூ.10340/– 17.4.2010லும் மேலும், ரூ.5035/– 24.7.2010லும் செலுத்தியுள்ளேன் என்றும் வாதுரை புரிந்தார்.

6.6 கட்டிடம் கட்டுவதற்காக பெறப்பட்ட தற்காலிக இணைப்பை திரும்ப கொடுத்த பின்பு அதில் உள்ள டெபாசிட் தொகை மீதி இருந்தால் தரவேண்டும் என்று மனு கொடுத்துள்ளேன், ஆனால், இதுவரை திரும்ப தரவில்லை என்று வாதிட்டார். முதலில் அவ்வாறு கொடுத்த மனுவிற்கு தன்னிடம் நகல் இல்லை என்றும் ஆனால், 20.7.13, 31.7.15 ஆகிய நாட்களில் இது சம்பந்தமாக மீண்டும் மனு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

6.7 மேலும், துணை நிதிகட்டுப்பாட்டு அலுவலகத்தில் 29.7.2015 அன்று மீதமுள்ள வைப்பு தொகையை திரும்ப தரவேண்டும் என்று மனு செய்துள்ளதாகவும் தெரிவித்து அதன் நகலையும் 21.12.2016 கேட்புரை நாளில் சமர்ப்பித்தார்.

6.8 ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளின்படி மீதமுள்ள வைப்புதொகையை தாமதமாக நுகர்வோருக்கு வழங்கினால் வாரத்திற்கு ரூ.100/– வீதம் ஈட்டுத்தொகை தரவேண்டும் என்பதால் அந்த ஈட்டுத்தொகையை தனக்கு வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

7. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாட்களில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. K. ராஜா, உதவி பொறியாளர் அவர்கள் 18.11.2016 அன்று கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.2 உதவி பொறியாளர் திரு. K. ராஜா அவர்கள் மேல்முறையீட்டாளர் ஒரு தற்காலிக மின்இணைப்பை கட்டிட வேலைக்காக பெற்றுள்ளார் என்று தெரிவித்தார். மேலும் தணிக்கை தொகையை தள்ளுபடி செய்ய தணிக்கை பிரிவு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், 2010ல் உள்ள ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதால் கால அவகாசம் வேண்டும் என்றும் கோரினார்.

7.3 21.12.2016ல் திரு. R.S. சுதாகர், உதவி செயற்பொறியாளர்/புறநகர்/மேற்கு தஞ்சாவூர் பொறுப்பு அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.4 திரு. R.S. சுதாகர், உதவி செயற்பொறியாளர், அவர்கள் தற்காலிக மின்இணைப்பு வழங்கியது சம்பந்தமான தகவல்கள் கணினியில் பதிவு செய்யப்படவில்லை என்றும் ஆனால் தகவல்கள் தனியாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். அந்த மின்இணைப்பின் எண்.58 என்று பதிவாகிஉள்ளது என்று தெரிவித்தார். மேலும், அந்த மின்இணைப்பு 23.4.10 முதல் 25.10.10 வரை பயன்பாட்டில் இருந்துள்ளது என்று தெரியவருகிறது என்றும் தெரிவித்தார்.

7.5 மேற்கண்ட தற்காலிக மின்இணைப்பின் கோப்பு அலுவலகத்தில் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

7.6 மேற்கண்ட தற்காலிக மின்இணைப்பிலுள்ள மீதித்தொகையை கேட்டு அவர் விண்ணப்பம் சமர்ப்பிக்கவில்லை என்றும் அவ்வாறு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அந்த மின்இணைப்பின் கணக்கை முடித்து தொகை எதுவும் மீதமிருந்தால் திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எனவே, இழப்பீடு தொகை வழங்க வேண்டியது இல்லை என்றும் வாதிட்டார்.

7.7 மின்இணைப்பு எண்.405–009–671, 26.10.2010ல் மேற்கண்ட வளாகத்தின் மாடிக்கு உள்ள மின்சாதனங்களுக்கு என்று உரிய கட்டணம் செலுத்தப்பட்டு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், 405–009–702 என்ற மின்இணைப்பு தரைப்பகுதியிலுள்ள மின்சாதனங்களுக்கும் பயன்படுத்தபடுகிறது என்றும் தெரிவித்தார்.

7.8 மேலும், மின்இணைப்பு எண்.405–009–671 கட்டிட வேலை காலங்களில் பிரிவு அலுவலகத்தில் safe custody இருந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

**8. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

**8.1** இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக அறியப்படுகின்றன.

(i) மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டுவதற்காக தற்காலிக மின்இணைப்பு பெற்றுள்ளார் என்பது சரியா ?

(ii) அவ்வாறு பெற்றுள்ளார் எனில் அந்த மின்இணைப்பு எந்த நாளில் பெறப்பட்டது எந்த நாள் வரை உபயோகத்தில் இருந்தது ?

(iii) மின்இணைப்பு எண்.405–009–671 கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று வாதம் ஏற்புடையதா ?

(iv) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான தணிக்கைத்தொகை ரூ.2,49,591/– ரத்து செய்ய வேண்டும் என்பது ஏற்புடையதா ?

(v) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான தற்காலிக மின்இணைப்பு முடித்த தினத்திலிருந்து 3 மாத காலத்திற்குள் மீதித்தொகை திரும்ப அளிக்கப்படவில்லை என்பதால் வாரம் ஒன்றிற்கு ரூ.100/–வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

**9. <u>வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வு :</u>**

**9.1** மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான இடத்தில் 500 சதுர அடி கட்டிடம் கட்டுவதற்காக ஒரு தற்காலிக மின்இணைப்பை 23.4.2010 அன்று பெற்று 25.10.2010 வரை உபயோக படுத்தியுள்ளதாக வாதிட்டுள்ளார். மேலும், அவர் தற்காலிக மின்இணைப்பு சம்பந்தமாக பணம் செலுத்தியமைக்கான கீழ்கண்ட ரசீதுகளின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளளார்.

(i) TRT 405IA2S561, dt.30.3.2010 – ரூ.50/–

(ii) TRT 405IA2S344 dt.17.4.2010 – ரூ.10,340/–

(iii) TRT 405IA2S501 dt.24.7.2010 – ரூ.5035/–

மேலும், அந்த மின்இணைப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ள வெள்ளை அட்டையின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

9.2 எதிர்மனுதாரரும் தற்காலிக மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துள்ளார் அதற்கு ஆதாரமாக new service connection register ன் சம்பந்தப்பட்ட மின் இணைப்பு எண் பதிவு ஆகியுள்ள பக்கத்தையும் (38ம் பக்கம்) தற்காலிக மின்இணைப்புகள் பிரிவு ஏட்டின் சம்பந்தப்பட்ட பக்கத்தின் நகலையும் அளித்துள்ளார். மேலும், 23.4.2010 முதல் 25.10.2010 வரை மேற்கண்ட மின்இணைப்பை கட்டிட பணிக்காக பயன்படுத்தியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

9.3 எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ள தற்காலிக மின் இணைப்புகளின் பதிவு ஏட்டின் சம்பந்தப்பட்ட பக்கத்திலுள்ள தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| | R. செந்தில்குமார், | – | SC No.58 |
| | Name | – | R. செந்தில்குமார்,<br>107, முத்து நகர்<br>புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர். |
| | Reg No. | – | 43/09–10 dt.30.3.10 |
| | Con Load | – | 930 watts |
| | Reg fees | – | Rs.50/– PR No. S561/30.3.10<br>Rs.10,340/– PR S344/17.4.10 |
| (1) | 23.4.10 | – | 21.7.10 131 Rs.4935/– S501/24.7.10 |
| (2) | 22.7.10 | – | 19.10.10 |

Sd /xxx xx
Assistant Engineer
Rural/West
Tamil nadu Electricity Board
Thanjavur

9.4 மேற்கண்ட தகவல்களின்படி தற்காலிக மின்இணைப்பின் எண்.58, அதில் 23.4.10 முதல் 21.7.10 வரை உள்ள உபயோகம் 131 யூனிட் நுகர்வோர் செலுத்திய தொகை 30.3.10 அன்று ரூ.50/–, 17.4.10 அன்று ரூ.10340/– மற்றும் 24.7.2010 அன்று ரூ.4935/– என்று தெரிகிறது.

இவற்றில் மேல்முறையீட்டாளரின் ரசீதுகளில் உள்ள ரூ.50/– மற்றும் 10340/– சரியாக உள்ளது ஆனால் 24.7.2010 வசூல் செய்த தொகை ரூ.5035/– ஆகும்.

9.5 மேலும், எதிர்மனுதாரர் அளித்துள்ள new service connection Registerன் சம்பந்தப்பட்ட பக்கம் 38ல் உள்ள தகவல்களின்படி திரு. R. செந்தில்குமார், 107, முத்து நகர், புதுகை ரோடு அவர்களுக்கு 23.4.10 அன்று tariff VIல் 930 watts மின்சுமையுடன் மின்இணைப்பு எண்.58 வழங்கப்பட்டுள்ளது என்றும் அதில் உள்ள மின்அளவியின் எண்.40168259 என்றும் I.R.0 என்றும் சோதனைத்தாள் எண்.056– என்றும் அறிய முடிகிறது.

9.6 மேற்கண்ட தகவல்களின்படி மேல்முறையீட்டாளர் Tariff VIல் தற்காலிக மின்இணைப்பு எண்.58ஐ 23.4.10ல் பெற்றுள்ளார் என்பது தெளிவாக தெரிகிறது. 21.7.10 வரையிலான காலங்களுக்கான பயன்பாடு 130 யூனிட் என்று பதிவு ஆகியுள்ளது. எனவே, 21.7.10 வரை அது உபயோகத்தில் உள்ளது என்று தெரிகிறது. மேலும், 24.7.2010 அன்று advance CC charges ரூ.5035/– செலுத்தியுள்ளதாலும் எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பு 25.10.10 வரை உபயோகத்தில் இருந்தது என்று தன்னுடைய பதிலுரையில் தெரிவித்துள்ளதாலும் 23.4.10 முதல் 25.10.10 வரை மேற்கண்ட தற்காலிக மின்இணைப்பு பயன்பாட்டில் உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 10. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>

10.1 மின்இணைப்பு எண்.405–009–671ன் consumer ledgerஐ தணிக்கைப் பிரிவு ஆய்வு செய்யும் பொழுது மேற்கண்ட மின்இணைப்பு 26.10.2009ல் மின்பட்டியல் விகிதப்படி வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்டுள்ளது. அந்த மின்இணைப்பு கட்டிடம் முடிந்து விட்டது என்று IA ஆக மாற்றப்படவில்லை, ஆனால் புதியதாக ஒரு commercial மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது எனவே, வியாபார ரீதியான கட்டிடம் கட்டுவதற்கு உரிய Tariff VIல் பெறவேண்டிய மின்இணைப்பு வீடுகட்டுவதற்கு உரிய Tariff Vல் பெறப்பட்டுள்ளதால் 26.10.2010 முதல் 13.5.2013 வரையிலான காலங்களுக்காக விடுபட்டுபோன தொகை

ரூ.2,49,591/– செலுத்த வேண்டும் என்று தணிக்கை செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர் 15.7.2013ல் மேல்முறையீட்டாளர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்துள்ளார்.

10.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671ன் மின் அளவியானது தற்காலிக மின் இணைப்பு பெற்ற நாளான 23.4.2010 முதல் 25.10.10 வரை மின்வாரிய அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்தது என்றும் எனவே, அந்த மின்இணைப்பு கட்டிட வேலைக்கு பயன்படுத்தவில்லை என்றும் வாதிட்டுள்ளார். அந்த காலங்களில் அதில் பயன்பாடு எதுவும் பதிவாகவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி வாதிட்டார்.

10.3 மேலும், 25.10.2010 அன்று கட்டிட வேலை முடிந்த பின்பு மேற்கண்ட மின்இணைப்பு மாடிப்பகுதிக்கு என்று shift செய்யப்பட்டது என்று வாதிட்டார்.

10.4 எதிர்மனுதாரரும் மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671ன் மின் அளவி பிரிவு அலுவலகத்தில் safe custodyல் இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

10.5 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.405–009–671, 26.10.10 அன்று கட்டிட பணிகள் முடிந்த பின்பு மாடிப்பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார். consumer ledgerஐ ஆராய்ந்து பார்த்ததில் 26.10.2010 அன்று மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்று அறிய முடிகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | Appln & Reg Fees | – | ரூ.50/– | TRT405IA2S515 dt.26.10.10 |
| (ii) | Shifting charges | – | ரூ.150/– | TRT405IA2S529 dt.26.10.10 |
| (iii) | Testing fees | – | ரூ.75/– | TRT405IA2S529 dt.26.10.10 |
| (iv) | R.C. Charges | – | ரூ.60/– | TRT405IA2S529 dt.26.10.10 |

10.6 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளதால் அவரின் மீட்டர் shifting செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது. மேலும், மேற்கண்ட மின்இணைப்பு

தற்பொழுதும் மாடிப்பகுதிக்குதான் உபயோகப்படுத்தப்படுகிறது என்று கேட்புரையில் கலந்துகொண்ட எதிர்மனுதாரரின் பிரதிநிதியும் தெரிவித்தார்.

10.6 மேல்முறையீட்டாளர், அவர் தற்காலிக மின்இணைப்புபெற்று கட்டிட வேலை செய்ததால் 23.4.2010 முதல் 24.10.2010 வரை மின்இணைப்பு எண்.405–009–671 உபயோகத்தில் இல்லை. Safe Custodyல் இருந்தது என்று கூறுவதால் நான் அந்த மின்இணைப்பின் பயன்பாட்டளவை ஆராய விரும்புகிறேன். அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| Period | Reading | Consumption |
|---|---|---|
| 11/2009 | 10512 | 0 |
| 1/2010 | ” | 0 |
| 3/2010 | ” | 0 |
| 5/2010 | ” | 0 |
| 7/2010 | ” | 0 |
| 9/2010 | ” | 0 |
| 11/2010 | ” | 0 |
| 1/2011 | ” | 0 |
| 3/2011 | 10550 | 38 |

10.7 மேற்கண்ட தகவல்களின்படி 11/2009 முதல் 1/2011 வரை மின்பயன்பாடு எதுவும் இல்லை என்று தெரிகிறது. மேலும், 3/2011ல் 38 யூனிட்டுகள் பயன்பாடு என்று பதிவாகியுள்ளது எனவே, மின் அளவி நல்ல நிலையில்தான் உள்ளது என்றும் அறிய முடிகிறது. மேற்கண்ட காலத்தில் மின்இணைப்பு எண்.405–009–671 கட்டிட வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு இருந்தால் அதில் மின் பயன்பாடு (consumption) இருந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு மின்பயன்பாடு எதுவும் பதிவு ஆகவில்லை. அதேசமயம் தற்காலிக மின்இணைப்பில் 4/2010 முதல் 7/2010 வரை சுமார் 131 யூனிட்டுகள் பதிவு ஆகியுள்ளன என்பதுவும் எதிர்மனுதாரரின் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

10.8 இங்கு மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரும் 23.4.2010 முதல் 25.10.2010 வரை மின்இணைப்பு எண்.405–009–671 பிரிவு அலுவலகத்தின் safe custodyல் உள்ளது என்று

தெரிவித்துள்ளதாலும் மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671ன் மின் அளவியில் மின்பயன்பாடு எதுவும் பதிவு ஆகாமல் இருப்பதாலும் 26.10.10 அன்று மேற்கண்ட மின்இணைப்பு shift செய்யப்பட்டுள்ளது என்பதாலும் மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671 கட்டிட வேலைகளுக்கு பயன்படுத்தப்படவில்லை என்று தீர்வு செய்கிறேன்.

**11. <u>வழக்கெழு வினா நான்கிற்கான தீர்வு</u>**

**11.1** தணிக்கை பிரிவு மேல்முறையீட்டாளர் வீடு கட்டும் கட்டிட பணிக்கு என்று மின்இணைப்பு எண்.405–009–671 வழங்கப்பட்டு அது வியாபார ரீதியான கட்டிடம் கட்டுதவற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

**11.2** எதிர்மனுதாரர் மின்இணைப்பு எண்.405–009–671ல் வழங்கும் பொழுது பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் அதனுடன் பெறப்பட்ட ஆவணங்களும் எதுவும் தற்பொழுது கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் மேற்கண்ட கட்டிடம் hotel & Room கட்டுவதற்கு என்றுதான் Plan appoval பெறப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் நகலையும் அளித்துள்ளார். மேற்கண்ட மின்இணைப்பு எண்.405–009–671 வீடுகட்டுவதற்கு என்று வாங்கப்பட்ட மின்இணைப்பு என்று கருதுவது தவறு என்று நான் கருதுகிறேன்.

**11.3** மேலும், என்னுடைய வழக்கெழு வினா ஒன்று, இரண்டு ஆகியவற்றின் தீர்வின்படி மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டுவதற்கு தற்காலிக மின்இணைப்பு எண்.58 23.4.2010 முதல் 25.10.10 வரை பெற்றுள்ளதாலும் மின்இணைப்பு எண்.405–009–671ன் மேற்கண்ட காலங்களில் பிரிவு அலுவலகத்தில் safe custody இருந்தது என்பதை இருதரப்பினராலும் ஒத்துக்கொள்ளப்படுவதாலும் மின்இணைப்பு எண்.405–009–671 கட்டிட பணிகளுக்கு பயன்படுத்தியிருக்க முடியாது என்பதால் 26.10.2010 முதல் 13.5.2013 வரையிலான காலங்களுக்கான விடுபட்டுபோன தொகை ரூ.2,49,591/–ஐ ரத்து செய்ய வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>வழக்கெழு வினா ஐந்திற்கான தீர்வு</u>

12.1 மேல்முறையீட்டாளர், அவர் கட்டிடம் கட்டுவதற்காக பெறப்பட்ட மின்இணைப்பை 25.10.2010ற்கு பிறகு பயன்படுத்தவில்லை என்றும்அந்த மின்இணைப்பை முடித்து வைத்துவிட்டதாகவும் எனவே அதில் உள்ள மீதித்தொகையை திரும்ப வழங்க உத்தரவு இடவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

12.2 மேலும், தற்காலிக மின்இணைப்பை முடித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் மீதித்தொகை திரும்ப அளிக்கப்படவில்லை என்பதால் வாரம் ஒன்றிற்கு ரூ.100/— வீதம் இழப்பீடு தொகை வழங்க உத்தரவு இடவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

12.3 மேலும், தற்காலிக மின்இணைப்பில் மீதமுள்ள தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்று அவர் ஏற்கனவே மனு செய்துள்ளதாகவும் ஆனால், நகல் தன்னிடம் இல்லை என்றும் ஆனால் 20.7.2013 மற்றும் 31.7.2015 நாளிட்ட மனுக்களிலும் 20.6.2016 நாளிட்ட CGRFற்கு சமர்ப்பித்த மனுவிலும் மீதமுள்ள தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளதாகவும் வாதிட்டுள்ளார்.

12.4 எதிர்மனுதாரர் மேற்கண்ட தற்காலிக மின்இணைப்பில் உள்ள தொகையை மேல்முறையீட்டாளர் வழங்க வேண்டும் என்று இதுவரை மனு செய்யவில்லை என்றும் அவ்வாறு மனு செய்தால் மீதித்தொகை ஏதேனும் இருந்தால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டுள்ளார்.

12.5 இது தற்காலிக மின்இணைப்பினை முடித்துவைத்து மீதமுள்ள தொகையை திரும்ப வழங்குவது சம்பந்தமாக என்பதால் நான் மின்பகிர்மான செயல்திறச்செந்தாரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 6ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“**6.** தற்காலிக மின் வழங்கல் விழாக்களுக்கு ஒளியூட்டவோ, உறைவதற்கான வீடுகளுக்கோ, அடுக்கு வீடுகளுக்கோ, வணிக வளாகங்களுக்கோ, தொழிலக இருப்பிடங்களுக்கோ தேவைப்படும் கட்டுமானப் பணிகள் செய்யவோ மற்றும் பிறவற்றுக்காகவோ அத்தகைய விருப்பம் உள்ள நுகர்வோர்கள் தற்காலிக மின்னிணைப்புகள் தேவையெனக் கோரினால் தரப்படலாம். அத்தகைய தற்காலிக மின்னிணைப்புகளையும் புது மின்னிணைப்பு மற்றும்*

*கூடுதல் சுமை வழங்கக் குறிப்பிடப்பட்டுள்ள அதே கால தவணை அட்டவணையின்படி தர வேண்டும்.*

*தற்காலிக மின்னிணைப்பு வழங்கல் காலம் முடிந்து அம்மின்னிணைப்புகள் துண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உரிமதாரர் தம்மிடம் உள்ள வைப்புத் தொகையில் மீதம் இருந்தால் திருப்பி தந்துவிட வேண்டும்.''*

12.6 மேற்கண்ட விதியின்படி தற்காலிக மின்இணைப்பின் வழங்கல் காலம் முடிந்து அம்மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உரிமம்தாரர் தம்மிடம் உள்ள வைப்புத்தொகையில் மீதித்தொகை ஏதேனும் இருந்தால் திரும்ப தந்துவிடவேண்டும் என்று தெரிகிறது.

12.7 என்முன்னால் உள்ள இந்த வழக்கில் தற்காலிக மின் இணைப்பு வழங்கிய கோப்பு கிடைக்கப்பெறாததால் மின்இணைப்பு துண்டிக்கப்பட்ட நாள் தெரியவில்லை. ஆனால், எதிர்மனுதாரர் தற்காலிக மின்இணைப்பு 23.4.2010 முதல் 25.10.2010 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். எனவே, 26.10.2010 முதல் தற்காலிக மின்இணைப்பு பயன்பாட்டில் இல்லை என்பதால் 26.10.2010 அன்று அது மின்துண்டிப்பு செய்யப்பட்டது என்று எடுத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். அதிலிருந்து 3 மாதங்களுக்குள் வைப்புத்தொகை ஏதேனும் மீதமிருந்தால் திரும்ப வழங்கப்படவேண்டும். எனவே, மீதிதொகை இருந்தால் அவை 25.1.2011ற்குள் திரும்ப வழங்கப்படவேண்டும் என்று தெரிகிறது. இங்கு நுகர்வோர் திரும்ப வழங்க மனு செய்து 3 மாதங்களுக்குள் என்று விதியில் சொல்லப்படவில்லை என்பதால் மனு செய்தால்தான் வைப்புத்தொகையில் மீதிஇருந்தால் வழங்கவேண்டும் என்று எடுத்துக்கொள்ளமுடியாது என்று நான் கருதுகிறேன்.

12.7 இந்த மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மீதமுள்ள தொகை 3 மாத காலத்திற்குள் வழங்கப்படவில்லை என்பதால் வாரம் ஒன்றிற்கு ரூ.100/– வீதம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்று கோருவதால் நான் மின்பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 21ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"21. விதிக்கப்பட்ட செயல்திறத்தை அடைய வேண்டுமென உரிமதாரர் எதிர்பார்க்கப்படுகிறார். பல்வேறு மின்சேவைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட செந்தரங்களைச் சந்திக்க உரிமதாரர் தவறிவிட்டால், பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் உரிமதாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது.*

| *வ. எண்* | *நிகழ்ச்சிகள்* | *செலுத்த வேண்டிய ஈட்டுத்தொகை* |
|---|---|---|
| 1 | x x x x | x x x x |
| 2 | x x x x | x x x x |
| 3 | x x x x | x x x x |
| 4 | x x x x | x x x x |
| 5 | x x x x | x x x x |
| 6 | x x x x | x x x x |
| 7 | x x x x | x x x x |
| 8 | x x x x | x x x x |
| 9. | *தற்காலிக மின் வழங்கல் காலம் முடிவடைந்த பின்பு தற்காலிக மின் வழங்கல் பொறுத்த வைப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் மற்றும் மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் **6**ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் **17(6)**ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் **33(5)**ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான காலஅளவிற்குள் மீதி வைப்பீட்டுத் தொகையை திருப்பிக் கொடுத்தல்* | *திருப்பிக் கொடுக்கும் நாள் வரையில், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டிக்குக் கூடுதலாக வாரம் ஒன்றுக்கு அல்லது காலத்தாழ்வின் அதன் பகுதிக்கு ரூ.100/–* |

**12.8** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, விதிக்கப்பட்ட செயல்திறச்செந்தரத்தின்படி உரிமைதாரர் தன்னுடைய மின்சர பணிகளை செய்யவேண்டும். பல்வேறு மின்சேவைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செந்தரங்களை சந்திக்க உரிமம்தாரர் தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நுகர்வோர் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஈட்டுத்தொகையை பெறஉரிமையுடையவர் ஆவர். அத்தொகைகள் மேற்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**12.9** மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.9ன் படி தற்காலிக மின் இணைப்பிலுள்ள மீதமுள்ள வைப்புத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி அளிக்காவிடில் வாரத்திற்கு ரூ.100/– வீதம் அத்தொகையை திருப்பி அளிக்கும்காலம் வரை ஈட்டுத்தொகையாக வழங்கவேண்டும் என்று தெரிகிறது.

12.10 இந்த மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தற்காலிக மின்இணைப்பு எண்.58ன் கணக்கை முடித்து அவர் செலுத்தியுள்ள வைப்புத்தொகையில் ஏதேனும் மீதிதொகை இருந்தால் திரும்ப வழங்க வேண்டும் என்றும் மாறாக மின்நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யவேண்டியது இருந்தால் உரிய அறிவிப்பு கொடுத்து வசூல் செய்யவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

12.11 மேலும், அவருக்கு மீதித்தொகை திரும்ப அளிக்க வேண்டியது இருந்தால் 25.1.2011 முதல் அந்த தொகையை திரும்ப வழங்கும் வரை வாரத்திற்கு ரூ.100/— என்று ஈட்டுத்தொகை வழங்க வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

## 13. <u>முடிவுரை</u>

13.1 பத்தி 11யிலுள்ள வழக்கெழு வினா நான்கிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள நிலுவைத்தொகை ரூ.2,49,591/—ஐ தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்கிறேன்.

13.2 பத்தி 12யிலுள்ள வழக்கெழு வினா ஐந்திற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் தற்காலிக மின்இணைப்பின் கணக்கை முடித்து அவர் செலுத்தியுள்ள வைப்புத்தொகையில் மீதம் இருந்தால் அந்த தொகையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் திரும்ப வழங்க வேண்டும் என்றும், மாறாக மின்நுகர்வோரிடமிருந்து நிலுவைத்தொகை வசூல் செய்யவேண்டிய நிலை இருந்தால் மின் நுகர்வோருக்கு விதியின்படி அறிவிப்பு கொடுத்து அத்தொகையை வசூல் செய்யவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.3 மேல்முறையீட்டாளருக்கு தற்காலிக மின்இணைப்பு எண்.58ல் மீதம் அளிக்க வேண்டிய தொகை ஏதேனும் இருந்தால் அதை தாமதமாக திரும்ப வழங்குவதால் தாமதமான ஒவ்வொரு வாரத்திற்கு ரூ.100/— என்ற வகையில் 25.1.2011 முதல் திரும்ப வழங்கும் காலம்வரை ஈட்டுத்தொகை வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. ஈட்டுத்தொகை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டும் அல்லது மேல்முறையீட்டாளர் விரும்பினால் அவரின் மின்இணைப்பின் கணக்கில் வரவு

வைத்து இனிவரும் காலங்களின் மின்கட்டணத்தில் சரி செய்யலாம் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

13.4 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த உத்தரவு கிடைத்த 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

13.5 மேற்கண்ட முடிவுடன் தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.68/2016 இத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. R. செந்தில்குமார்,
107/1, முத்து நகர்,
18/117, காந்தி நகர்,
தஞ்சாவூர்–613 005.

2) மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர்–613 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர்–613 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.